
உ

தெய்வமேதுணை.

மாட்டுவயித்தியம்.



இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

56

உ

கடவுள்துணை.

மாட்டுவயித்தியம்.

பொது-விருத்தம்.

மனிதருக்குநோய்வந்தால் சொல்லுவார்கள்
மந்திரமும்வாகடமும் வந்துபேசும்
இனிதானபால்கொடுக்கும் பசுக்களுக்கும்
பெருதுக்கும்நோய்வந்தால் சொல்லேதப்பா
அனியாயமாய்மடிந்து போகுமென்று
அப்பனெபிருமணலூர் முனிசாமிதான்
கனிந்தபழம்போலுரைத்த முறைசெய்வோர்க்கு
கணபதியும்முனனிருந்து காப்பார்தானே.

அசீரணநோயின்குணம், தின்றயிரைபோலவே
சாணம்போடும் அடிக்கடி காத்துபரியும்.

நிவர்த்தி.

காழ்பதற்குமிளகுரெண்டு பலமேதாக்கு
கன்மணியவெற்றிலையில் பலந்தானஞ்சு
சேர்த்திரண்டும் அரைத்துவெந்நீரில்தாக்கி
செலுத்தப்பாஉள்ளுக்கு காலைவேளை
பார்த்திருந்தப்படிமூன்று நாளுஞ்செய்து
பக்குவமாய் கழுத்திலே சூடும்போடு
நீக்கவேபுண்ணியங்கள் மெத்தவுண்டு
பின்னமொருநோயகலப்பாருகேளே.

(வ-ம்.) வெற்றிலை ரு-பலம், மிளகு உ-பலம், ஒன்றுயரைத்துகால் படிவெந்நீரில்கலக்கி உள்ளுக்குபுகட்டவும் இப்படிமூன்றுநாள் கொடுக்கநிரும்மேற்கண்டிருக்கும்சூட்டைகழுத்தைசுத்திசுடவும்.

சுக்கல்நோயின்குணம், தின்றதீவனத்தை அப்பித்தள்
ளும் அடிக்கடிக்கு உடம்புமெலியும்.


நிவர்த்தி.

பாகற்கேள்வசம்புஒருபலமுங்குப்பை
மேனியிலைதூப்பிடி கூடச்சேர்த்து
பாகஞ்சேர்பிரண்டையுமேமைபோலாட்டி
பசும்பாலில்கலக்கியதை உள்ளுக்கேத்து

வேகமாய்கொள்ளாட்டால் நிறுத்திடாதே
வெதுப்புமடாநோயிருட லன்பத்தாலே
போகாட்டால்யென்னையுமீ மிந்திக்காதே
புகலுமிதேயின்னமொரு முறையுஞ்சூடும். ௩

குப்பைமேனியிலை ௪-பிடியும், வசம்பு ஒருபலமும் ஒன்றாய் அரைத்துபசும்பாலில் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

வேறுமுறை.




(வ-ம்.) சாதாரணமாய் காக்கையைப்பிடித்து காலத்தலை குடல்ரோமம் எலும்புநீக்கி மற்றதையிடித்து காடியில்கலக்கி புகட்டவும்இந்தப்படி மூன்றுவேளை செய்யத்தீரும்இடதுவிலாவில் இதில்கண்டபடி சுடவும்.

சீதவெதுப்புநோயின்குணம்.

எச்சைவாயில் இடைவிடாமல் கற்றாழைசோறுபோல்
வடிந்துக்கொண்டேயிருக்கும் பின்னங்கால்நடுங்கும்,

நிவர்த்தி.



முருங்கையிலைசாறுபடி ஒன்றுநாக்கு
முன்னமேகாடிமூன்று படியில்தாக்கு
சரியாகரெண்டுபலம் வெளிச்சிப்பட்டை
சாரித்துமெழுகுபோலரைத்துக்கொண்டு
கருவாகமுன்றுமரைத்த வஸ்துவோடே
கலக்கியதைநாடள்ளுக்கு புகட்டிவிட்டு
அரிந்துகொள்ளயிதிலிருக்கும் சூடுபோலே
அப்பனேயிடதுவிலாதன்னில்போடே. ௪


(வ-ம்.) முருங்கிலைச்சாறு ௧-படியும், காடி ௩-படியும் கலந்து அதிலே வெளிச்சிப்பட்டை ௨-பலம் அரைத்துப்போட்டு குடிப்பாட்டத்தீரும் யிடதுவிலாவில் சூடுபோடவும்.

போகந்திநோயின்குணம்.

வலிப்புதோன்றும் காலைதூக்கிக்கொண்டு நிற்கும்வரையில்
நீர்வடியும் யிளவளாய் சாணம்போடும் புல்தின்னாது.

நிவர்த்தி.

பொன்முசட்டைசமூலமடா பலந்தான்பத்து
போட்டுரலில்ஒருஜாமம் யிடித்தேயப்பால்




பின்னமிலாப் பசும்பாலை விட்டு நீதான்
பிழிந்து அரைப்படி சமமே யெடுத்துக்கொண்டு
முன்னுரைத்த நோயுள்ள பெருந்துகட்கு
மூன்றுநாள் புகட்டிடவே தீருந்தீரும்
இன்னபடி முடித்ததற்கு விபரமாக
இடதுவிலாதனிற் சூடுபோட நோய்தானே று. ௫

(வ-ம்.) பொன்முசட்டை மூலம் ௧௦-பலங்கொண்டுவந்து உரலி ல்போட்டு இடித்து பசும்பால் விட்டுவிட்டு பிசைந்து அரைபடி சாம் பிழிந்துக்கொண்டு உள்ளுக்குப் புகட்டவும் இந்தப்படிமூன்று நாள் செய்யவும் சூட்டை யிடதுவிலாவில் போடவும்.

எலும்புருக்கிநோயின் குணம், செவந்தசாணம்போடும்.

நிவர்த்தி.



தும்பையிலைசாறுபடி யுரிகிவந்து
துகளாமல்மைபோலே அரைத்துக்கொண்டு
வம்பேதுகாடியென்ற கஞ்சிக்காச்சி
வளமாக அரைத்தவுண்டை போட்டுக்கிண்டி
தம்பியே பெருந்துக்கு இதுவே பாகம்
தக்கபடி மூன்றுநாள் புகட்டியப்பால்
கம்பிதனை காச்சியிட விலாவுதன்னில்
கண்டபடி பிசகாமல் மாட்டிப்போடே ௬

(வ-ம்) தும்பையிலையில் ௪-படி கொண்டுவந்து அரைத்து காடிக் கஞ்சியில் கலக்கிப்புகட்டவும் இந்தப்படிமூன்றுநாள்செய்யவும்.


நேதிநோயின்குணம், வயிறிறையும் வாயில்நீர்வடியுஞ்சாணப் நாறும் கண்ணில் பீளைசாறும், நிவர்த்தி.



மலராதயெருக்கம்பூ பலந்தானஞ்சி
மைந்தனே நல்லசீரகந்தான்பாதி
கலந்திரண்டுமொன்றாக அரைத்துக்கொண்டு
காடியிலேகலக்கியதை புகட்டிப்போடு
விலகுமடா மூன்றுநாள் மருந்தைபிந்து
விபரமாய்ச்சுட்டது விலாவில்போட்டால்
தலமதனில்நோய்நீங்கி பெருந்தமீளும்
தருமமிதைவிடவேறு வுலகிலுண்டோ. ௭

(வ-ம்) எருக்கும்பூ மலராத பக்குவமாயுள்ளது ௫-பலம் நல்ல சீரகம் ௨½-பலம் ஒன்றாய் அரைத்து காடியிலேபோட்டுக் கலக்கி புகட்டவும் இந்தபடிமூன்றுநாள்தரவும் இடதுவிலாவிற்சூடுபோ டவும்.


வல்லாளநோயின் குணம்.
நீர்சிவந்து ரத்தம்போல் யிறங்கும்.
நிவர்த்தி.



தென்னம்பூம்பாளையது ஒன்றுவாங்கி
தேறினதாய்நெல்லிக்காய் படியேதாக்கி
இன்னிரண்டும் நன்றாகயிடித்துக்காடி
தண்ணீரில்கலக்கியிதைகாட்டவேணும்
யின்னபடிமூன்றுநாள் தவராதிந்து
யெழுநிவைத்தபடிசூடுபோடவேணும்
மன்னவனேயிடதுவிலாதன்னில்போட்டு
மாட்டுக்குஅபாயமில்லை மனம்நோகாதே. ௮

(வ-ம்) நெல்லிக்காய்படி-௧ தென்னம்பாளை-௧ ஒன்றாயிடித்து காடித்தண்ணீரில்கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள்கொடுக்கவும் யிடதுவிலாவில் சூடவும்.


சாணத்துடன் உதிரம்விழும்வியாதிக்குமருந்து
நிவர்த்தி.



நிலக்குமிளவேர்பட்டைபலமிரண்டு
நேரவேஅரைத்துபசுந்தயிரில்போட்டு
கலக்கியேகுடிப்பாட்டவேணுமப்பா
கைகண்டமுறையிதுவேமூன்றுநாளும்
நிலவரங்களில்லாமல் செய்துபாரு
நெஞ்சிநிலுங்கழுத்திநிலும் சூடவேணும்
பலவிதமாய் யோசிக்கவேண்டாமைபா
பாரிலிதைவிடவேறே முறைதானுண்டோ. ௯

(வ-ம்) நிலக்குமிழிவேர் உ-பலம்கொண்டுவந்து நேரஅரைத்து பசுந்தயிரில் கலக்கிப்புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும் நெஞ்சிலும் கழுத்திலும் சூடவும்.

நீராழியின்குணம், நீராயிரங்கும் நாளுக்குநாள் உடல்கரைந்துமெலிந்து விடும்நன்றாய் தீவனந்தின்னாது நிவர்த்தி




அஞ்சிபலம்ஈருள்ளி யெடுத்துக்கொண்டு
ஈரஞ்சிபலஞ்சேறு கற்றாழைசேர்
கொஞ்சமடாமிளகுத்தூள்பலந்தானென்று
கூடவேதிப்பிலித்தூள்பலந்தான்கூட்டு
துஞ்சவேஅரைத்துஜெலந் தனில்கலக்கி
தூயவனேயிந்தபடி மூன்றுநாள்தான்
அஞ்சாமல்குடிப்பாட்டி மூன்றுநாளில்
அப்பனேயிடதுவிலா தன்னில்சூடே. ௰

(வ-ம்) மிளகுத்தூள் ௧-பலம் திப்பிலித்தூள் ௧-பலம்சுக்குநாறை சோறு ௧௦-பலம் சுருள்ளி ரு-பலம் ஒன்றாய்ப்போட்டு அரைத்துவெ ந்நீரில்கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள்செய்து இட துவிலாவில் சுடவும்.

கோளைவிக்கத்தின் குணம்.

நிவர்த்தி.




கன்னத்தில் வீங்கி இரைதின்றுநருக்குள்ளி க்கொண்டிருக்கும் இந்தப்பிரகாரமே வீக்கத் திற்சுடவும்.

இதுபோல்கழுத்திற்சுடவும்



நெஞ்சில்பாரைபோல்வீங்கும்குணம்.

அதற்கு மருந்துஞ்சூடும்போடநிவர்த்தி.




கல்லெண்ணைகால்படிதான் அளந்தெடுத்து
நல்லமஞ்சள்கிழங்குதன்னை யிடித்தசாறு
சொல்லுவதேன் கால்படிசார்பிழிந்துக்கொண்டு
சேர்த்திந்தமிளகுபலம் ஒன்றுதாக்கி
கல்வத்தில்அரைத்துமுன் மருந்திற்றாக்கி
காச்சியேயுள்ளுக்கு புகட்டுவாய்நீ
நல்லமுறையிதுபோலே மூன்றுநாளும்
நடத்தியபின்வீக்கத்திற்சூடும்போடே.

(வ-ம்) கூரல்லெண்ணை வ-படியில் பச்சைமஞ்சள் கிழங்கையி டித்தசாறு கால்படி பிழிந்து ஒருபலம் மிளகுந்தூள் செய்துபோ ட்டு கலக்கி கொடுக்கவும் இந்தமுறை மூன்றுநாள்செய்யவும் வீ க்கத்தின்மேலே சூடுபோடவும்.

குடல்முறுக்குநோயின் குணம்.

கிடந்தயிடத்திற்கிடக்கும்காலைச்சுருக்கும் சாணமிடும்.

நிவர்த்தி.




காய்பாகல்பிலைச்சாறு படிதானொன்று
நல்லபசும்பாலதிலே படிதானாக்கி
தோய்ந்தவெண்ணைபுருக்குமெய்ப்படியரிக்கால்
கொதிக்குகலக்கிவிலாக்கூளுக்கேற்ற
பேய்த்தனமாயிருக்காதேநலமைத்தாலாகில்
பலமிரண்டுஅகில்பட்டைகாடிதன்னில்
தோய்த்துநன்றாயுரவைத்து அரைத்தூட்டு
தொந்தமிடுவாய்ப்புதற்கு நெஞ்சில்போடே.

(வ-ம்) நாய்ப்பால்இலைச்சாறு படி-க, பசுவின்பால்படி-க, பசும் நெய் படி அரிக்கால் ஒன்றாய்க்கலந்து புகட்டிடமறுநாள் அகிலபட்டையைபிடித்துகாடியில் ஊரவைத்துபுகட்டவும்நெஞ்சில்சுடவும்.

ஈரல்முட்டிநோயின்குணம்.

நீவனந்தின்னாது பல்லை நெறநெறவென்றுகடிக்கும்
வயிறூதும் கண்ணில்பீளைசாறும் இரத்தம்போல்நீர்வடியும்
புழுக்கைபோல சாணம்போடும் நிவர்த்தி.

பிரண்டைதண்டுப்பிடியொன்று பரித்துக்கொண்டு
பேசியதோர்மதுக்காரை வேரின்பட்டை
இரண்டையுமேயிரண்டுபிடி ஒன்றாய்ச்சேர்ந்து,
யிடித்துநன்றாய் மயனம்போல்அரைத்துக்கொண்டு
திரமானகாடியிலே கலக்கியப்பா
தேக்கிடுவாய்எருதுக்குமூன்றுநாளும்
இருபுரமும்கழுத்துமுதல்வால்வரைக்கும்
யிறபோலேசூடுதற்குயிழுத்துபோடே.



(வ-ம்) பிரண்டைத்தண்டுபிடி-க, மதுக்காரைவேர்பட்டைபிடி-க, இவைகளை மயனம்போலஅரைத்து காடியில்கலக்கி புகட்டிரும் மேற்படி சூட்டை கழுத்திலிருந்து வால்வரையிலும் யிழுத்துச்சுடவும்.

வெங்கோடிநோயின்குணம்.

உடல்நடுக்கும் மூக்கில்இரத்தம்விழும் குன்னிக்கொண்டு
நிற்கும் இரைதின்னாது நிவர்த்தி.

மதுக்காரைவேர்ப்பட்டையொடு வெள்ளைப்பூண்டு
மைந்தனேவகைக்குபலம் மூன்றுவாங்கு
பதராதேயெருதுக்குவியாதியென்று
பலம்ஒன்றுவசம்புஅதின் கூடசேர்த்து
பதமாகஅரைத்துவென்னீரில்தாக்கி
பக்குவமாயிந்தமுறைமூன்றுநாள்தான்
இதினுரைத்தபடிசூடு குறிப்புகண்டு
யிடதுவிலாதனில்போட்டால் யேதுநோயே. கஎ




(வ-ம்) மதுக்காரைவேர்பலம் ந வெள்ளைப்பூண்டுபலம் ந-வசம்பு பலம் க இவைகளையறைந்து இளவெந்நீரில்கலந்து புகட்டவும் சுக்கு க-பலம் எடுத்து சிறுநீர்விட்டு யிடித்து உலர்த்தி சல்லாத்துணியை டிடிந்து நாசியில் நசியமிடவும்.

ஊநடைப்பன் நோயின்குணம் வெப்புமாம் கண்சிவக்கும்
வாயில்நீர்வடியும் இதற்கின்றுநிவர்த்தி

மிளகிதற்குசெம்பலம் வேறுமாம்வெறும்
மருக்காரைவேர்பட்டை பலம் ஐந்துவெறும்
அளவிதற்குவெள்ளுள்ளி பலமிரண்டு
ஆகுமடா ஒன்றாக அரைக்கவேணும்
தளராமனம்வேண்டாம்நீ காடியென்ற
தண்ணீரில்கரைத்தப்பா உள்ளுக்கேந்து
அளவாகயிதற்குமுறை மூன்றுநாளும்
ஆனாபின்னேயிடதுவிலா தன்னில்சூடே. ௧௫

(வ-ம்) மிளகு பலம் உ மருக்காரைவேர் பட்டை பலம்ரு வெள்ளுள்ளி பலம் உ ஒன்றாக அரைத்துக்காடிநீரில் கரைத்து புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் செய்யவும் இடதுவிலாவில்சூடவும்.

நல்வாரிநோயின்குணம் இரத்தமாய்நீர்விடும்
நெஞ்சு வீங்கும் நிவர்த்தி.



நல்வாரிநோய்தனக்கு பக்குவந்தான்
நங்கையரே ஓரிலை தாமரைசமூலம்
வில்லேர்ந்தபுருவமுள்ள விழியணங்கே
விஷ்ணுகிரந்திசெடி யிவையிரண்டும்
சொல்வழிதனிலுவகையும்சமமாய்க்கொண்டு
காரியிடமோருவிட்டு யிடித்தாகன்றாய்
புல்லவேஒருபடிசார் பிழிந்துகொண்டு
புகட்டுவாயிந்தமுறை மூன்றுநாளே. ௧௬


(வ-ம்) விஷ்ணுகிரந்தி சமூலம் ஓரிலை தாமரை சமூலம் சமமாய்க்கொண்டுவந்து உரலில்போட்டு பசுவின்மோர்விட்டு யிடித்து ஒருபடி சார் பிழிந்துக்கொண்டு உள்ளுக்கு புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் செய்யவும் இதற்குசொல்லிய சூட்டை இடதுவிலாவில் சூடவும்தீரும்.

பறங்கிநோயின்குணம்.
தேகமெங்கும் கொப்பளம்போல் வெடித்து
மின்சிலம்புபோல்அசறும்ரோமமும்உதிரும்
நிவர்த்தி.

அத்திவெளிப்பிஞ்சியிலே பழமிரண்டு
அதிமதுரம்கூடவே பலமிரண்டு
பத்திவெள்ளுள்ளி பலமிரண்டு
பாக்கானவக்கபட்டை பலமிரண்டு
இத்தனையும்பிடித்தாகன்று யரைத்துகொண்டு
வெத்திமையுடகமுநீரில் கலக்கிக்காட்டு
மெத்தவின்னுமூன்றுநாள் யிந்தபாகம்
மெல்லியரே திராட்டால்வேறுகேளே. ௧௭

(வ-ம்) அத்திப்பிஞ்சு அதிமதுரம் சுருள்ளி இலவங்கப்பட்டை இருதகளைவகைக்கு உ பலம் விதமாய்பிருத்து ஒன்றாய்போட்டு யிடித்துநன்றாய் அரைத்துகழுநீரில்கலக்கிபுகட்டவும் மூன்றுநாள்செய்து பார்க்கவேணும் தீராவிட்டால் வேறேபாகமும் சூடும்கூறுகிறார்.

இதுவுமது.




வேப்பிலையைஉரிவிவந்து உரலில்பாட்டு
விதமாகக்காடிவிட்டு யிடித்திடித்து
காப்பிட்டகரத்தாளே ஒருபடிசார்
கணக்காகவேபிழிந்து யெடுத்துகொண்டு
தோப்பிலுள்ள யீரவெங்காயந்தன்னை
துகளவேரெண்டுபலம் அறைத்துப்போட்டு
சாப்பிடவேயெருதுக்கு யிந்தபாகம்
சடங்காமல்மூன்றுநாள் செய்துபாரே. க௮

(வ-ம்) வேப்பிலையைஉரலில் போட்டுகாடிவிட்டு யிடித்துயிடித்து ஒருபடி சாறுபிழிந்துகொண்டு அதிலே ஈரவெங்காயத்தை இரண்டுபலம் அறைத்துப்போட்டு கலக்கி உள்ளுக்குபுகட்டவும் இந்தப்பிரகாரம் மூன்றுநாள் செய்யவுந் தீரும் இடதுவிலாவில் இதுபோல் சூடுபோடவும்.

நாறுநோயின்குணம்.

குன்னிக்கொண்டு நிற்கும் செவி தாழும்

இதற்கு நிவர்த்தி.



முலைப்பால்தான்படியரிக்கால் கரந்துக்கொண்டு
முற்றினதோர் தேங்காய்ப்பால் பதினென்று
கலவிழியின்நேராளே நல்லயெண்ணை
கால்படியேபோதுமிவை சொல்லக்கேளு
கலக்கிடுவாய்முப்பொருளும் ஒன்றாயூத்தி
கண்மணியே யிதுபோலே மூன்றுநாள்செய்
நிலக்குமோ வந்தநோய் குடியேபோச்சு
நீயதற்கு யிருபுறமும் சூட்டைபோடே. க௯


(வ-ம்) தேங்காய்பால் ஒருபடி நல்லெண்ணை கால்படி முலைப்பால் அரிக்கால்படி ஒன்றாயூத்தி நன்றாய்கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள்செய்யத் தீரும் இரண்டு பக்கம் விலாவிலும் சூடுபோடவும்.

தவளைநோயின்குணம்.

பிள்ளைகள் தவிழ்தல்போலத் தவிழும் காலுகாலும்

இதற்கு நிவர்த்தி

குப்பையிடமேனியிலை அமுலாவாரை
கொண்டுவாவகைக்குப்பலம்பத்துவிதம்.



அப்படியேபோல எலிவிட்டு விரைந்துக்கொண்டு
 ஆனைக்கொடியிலே கலக்கினாலும்
கைப்பிடியாய்ப்பிழிந்தச்சாறெடுத்தாலும்
 கலசத்தில் மைபோலே அரைத்தாலும்
செப்படியென்றுறமையைக உள்ளுக்கேத்து
 யித்தபடி மூன்றுநாள் செய்துபாரே. உ௦


(வ-ம்) குப்பைமேனியிலை ௰-பலம் சமுலாயாரையிலை ௰-பலம் இவைகளை நன்றாயிடித்து காடிநீரில் கலக்கியாவது இடித்துச் சாற்பிழிந்தாவது அல்லது காடிவிட்டரைத்து உருண்டைசெய்தாவது உள்ளுக்கு கொடுக்கவும் இந்தப்பிரகாரம் மூன்றுநாள் செய்யவுந்தீரும் இந்தப்படி வலதுவிலாவில் சூடுபோடவும்.

இதற்கே வேறுமுறை.

(வ-ம்) நைவேலி ௰-பலம் குப்பைமேனியிலை ௰-பலம் தும்பையிலை ௰-பலம், மிளகு ஒருபலம், வெள்ளைப்பூண்டு ஒருபலம் இவைகளை ஒன்றாயரைத்து மொத்தைசெய்து உள்ளுக்கேத்த மேற்படி தவளைநோய்தீரும்..

மேதாவிநோயின் குணம்.

நெஞ்சடைந்து தொண்டைக்கட்டி செருமும் நிவர்த்தி.




அன்னமேமிளகுத்தான் பலமேஒன்று
 அதுபோல திப்பிலித்தான் பலந்தானொன்று
சொன்னமேபசுவின்நெய் தனிற்குழப்பி
 சோதிப்பாயெருதுக்கு கொடுத்துநீதான்
பின்னமேன்யித்தமுறை மூன்றேநாள்தான்
 யித்தப்பார் நோயென்ற வார்த்தையேது
அன்னமேஇதிற்குறித்த சூடுதன்னை
 அடிவயிற்றிற்போடென்றே னறிந்துகொள்ளே. உக

(வ-ம்) மிளகு ஒருபலம் திப்பிலி ஒருபலமும் மயனம்போல் அரைத்து பசுவின்நெய்யில் குழப்பிகொடுக்கத் தீரும், இந்தப்படி மூன்றுநாள் செய்யவும் இதில் கண்டிருக்கும் சூட்டைப்போல் கீழ் வயிரென்கிற அடிவயற்றில் சூடவும்.

குதவடைப்பன் நோயின்குணம்.


கொம்பைச்சுற்றிவீங்கும் வாய்திரவாதுகண்சிவக்கும் நிவர்த்தி.




இந்துப்புபலந்தானு சொல்லக்கேளு
 பேத்திமையேபெருங்காயம் பலமோடாறு
சுக்காயம்விட்டு மையாயரைட்டு
 சரிப்பாய்ப்பசும்பால்தானுழக்கேபோதும்;

இந்தபடி கலக்கியதை யிந்துபோடு
யிதுபோலேமூன்றுநாள் செய்தேபாரு
வந்தநோய்சொல்லாம லோடும்பாரு
வாவென்று அழைத்தாலும் யிடந்தானேது. உஉ

(வ-ம்) இந்துப்பு நால்பலம், பெருங்காயம் கால்பலம், ஒன்றுயரைத்துகால்படி பசும்பாலில் கலக்கி புகட்டவும் இதுபோலமூன்றுநாளைக்கி கொடுக்கவும் திரும்..



இடதுபக்கம் மேல்கொண்டைமுதல் வலதுகால்வரையிலும் இந்த சூட்டை யிழுத்து போடவும் அல்லது இந்தப்படிக்கே யிருவிலாவிலும் சுடவும்.



கொம்பைசுற்றி வீங்கியிருக்கு மென்று முன்கூறியதற்கு கொம்புமேல் உள்வீக்கத்தை சுற்றிச்சுடவும்.

தலைப்புதுநோயின் குணம்.

காலைவெட்டிக்கொண்டு நிற்கும்மனிதரைப்பாயும் உடல் மெலியும் பொய்மேச்சலாய்மேயும் நிவர்த்தி.




விளக்கெண்ணை கரியுப்பு வெள்ளைப்பூண்டு
வசம்புடனே அத்தியிட வேரின்பட்டை
அளவாக நாயுருவி யிலையோடற்று
அளவெல்லாஞ் சொல்லுகிறே னிடிக்க
வேணும்
களக்கமா யரைத்துமுத லெண்ணை தன்னில்
கலக்கியே புகட்டிவிட வியாதிபோச்சு
றலக்கமா யிடதுவிலா பக்கந்தானே
அஞ்சாம லேதைப்போலே சூடும்போடே. உ௩

(வ-ம்.) விளக்கெண்ணை படி-க், மற்றவை வகைக்கு ஒருபலம் வீதமாக எடுத்திடித்து நன்றுயரைத்து மேற்படி எண்ணெயில் கலக்கிப் புகட்ட திரும். இந்தப்படி இடதுவிலாவில் சுடவும்.

அங்கிநோயின் குணம்.

இருவிழியும் இரத்தமபோல் சிவக்கும் நிவர்த்தி.

துளசியிலை ஐந்துபலம் நிறுத்தெடுத்து
துகளவே அரைத்தாவின் மோரில்போட்டு
கலக்கியே புகட்டிவிடு வியாதிபோகும்
கண்மணியே இந்தமுறை மூன்றுநாள்செய்




துலக்கமா யிடதுவிலாப் பக்கமாக
தோற்றமின் படிசூடு போட்டுவிட்டால்
நிலைக்குமொழுக்குநோய் குடியேபோச்சு
நெறியுடையயிந்தமுறை கைவிடாதே.

(வ-ம்.) நாசியிலே ரு-பலம் பிழிந்து அரைத்து பசுவன்மோ ரில்கலந்து புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள்செய்யத்திரும். இடதுவிலாவில் சுடவும்.

தாளுந்துநோயின் குணம்.

அருவருப்பாய் மேயும், மனங்கொண்டு யிரைதின்னாது,
அடிக்கடி தண்ணீர்குடிக்கும்,
மனிதரைக்கண்டால் பாயும் நிவர்த்தி.

முத்தினதோ ராவாரை யிலையானாலும்
மொய்குழலே பட்டையது அகப்பட்டாலும்
தானைந்துகல்லாப் படியரிக்கால் சார்பிழிந்து
தோகையரேநல்லெண்ணை சமனாய்ச்சேர்த்து
மித்தமதுகலந்தூற்றி யிந்துபாரு
மிகுமடிநோய்களெல்லாம்பனியைப்போலே
மெய்நெனவே யிந்தமுறை மூன்றுநாள்தான்
மெல்லியரே யிடதுவிலாதன்னில் சூடே.



(வ-ம்) முத்தின ஆவாரையிலையாவது பட்டையாவது யிடித்து அரிக்கால்படி சாறுபிழிந்து அதுபோலவே நல்லெண்ணைசேர்த்து கலந்துபுகட்டவும் திரும், மூன்றுநாளைக்கி யிந்தமுறை செய்து பின் இடதுவிலாவில் சுடவும்.

சேங்கநோயின்குணம்.

தலைக்குத்திட்டுநிற்கும் இரைதின்னாது
நிவர்த்தி.


கர்ப்பூரவல்லிச்சார் படிதானென்று
கலக்கவே நல்லெண்ணை படிதான்காலு
சொற்பூத்தவொளியிலாளே யிரண்டுமொன்றாய்
தொகுதிந்தப்புகட்டிவிட நோயகதேது
விற்பூத்தவிழியாளே யிந்தபாகம்
விருமாகமூன்றுநாள் செய்தபின்பு
கற்பூத்தபடியிடது விலாவைப்பார்த்து
காய்ச்சிபோட்டிவிடு சூட்டைத்தானே.

(வ-ம்) கர்ப்பூரவல்லி சமூலங் கொண்டுவந்துயிடித்து படிசாறு பிழிந்து அதற்குக்கால்படி நல்லெண்ணைகலந்து புகட்ட வும் திரும் இந்தமுறை மூன்றுநாள்செய்யவும் இந்தப்படி இடதுவிலாவில் சுடவும்.

முக்கடைப்பன் நோயின்குணம்.


மூக்கடைத்துக்கொண்டு குருகுருவெனச் செருமும் ஊதும் நிவர்த்தி.

நொச்சியிலையோடு கரியும்பாரும்
நையவெருக்குப்பையிட மேனியாகும்
மைவிழியே கண்டங்கத்திரிப்பழந்தான்
கணக்கில்லை சமபாகம் வசம்புஞ்சேரு
ஐவகையும் சமமாக நிறுத்துக்கொண்டு
ஆனாங்கே சிறுநீர்விட்டிடித்துக்கொள்ளு
பையவே சீலையிலே முடிந்துகொண்டு
பக்குவமாய் நாசியிலே பிழிந்துபோடே. ௨௭



(வ-ம்) கண்டங்கத்திரிபழம் கரியுப்பு நைவேளையிலை வசம்பு குப்பைமேனியிலை இவைகளை சரியிடையாயெடுத்து சிறுநீர் விட்டு யிடித்துசீலையில் முடிந்து மூக்கில் பிழியத்தீரும் கரண்டிரசம் பிழியலாம், இந்தப்படி இருவிலாவிலும் சுடவும்.


இந்துநோயின் குணம்.



(வ-ம்) நாலுகாலும் தளர்ச்சியாயிருக்கும் இதற்கு நிவர்த்தி இதில்கண்டிருக்கிற சூலம் போல் நாலு காலிலும் முழங்கால் களிலும் நெஞ்சிலும் சூடிவிடத் தீரும்.

கண்ணிலும்வாயிலும் நீர்வடியும்சாணமாய்பீசும் கழியும் காற்றமடிக்கும் நிவர்த்தி.

இண்டமென்ற செடியினிட கொழுந்துவாங்கு
வேந்திழையே விளாயிலையும் வகைதான்ரெண்டு
கொண்டுவாமும்மூன்று பிடியிரண்டும்
கொட்டிவிடுமூன்றுபடி தண்ணீர்க்குள்ளே
செண்டாடும்படிபோலே கலக்கிப்போடு
செலுத்துவிடுஉள்ளுக்கு யிதுவேபாகம்
கண்டபடி உழலாதே மூன்றுநாளும்
கருத்தாகயிந்தமுறை தந்துபாரே.




(வ-ம்) விளாயிலை மூன்றுபிடியும் இண்டங்கொழுந்து மூன்று பிடியுங்கொண்டுவந்து அரைத்து மூன்றுபடி தண்ணீரில் கலக்கி புகட்டவுந் தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும் இடதுவிலாவில் சூடுபோடவும்.

கோக்கைநோயின்குணம்.

வயிறூதும் அறுவருப்பாய் மேயும் செவிதாழும் நிவர்த்தி.


யேலமொடு மிளகு கருஞ்சீரகந்தான்
வேந்திழையேநல்ல சீரகமுஞ்சுக்கு



சாலவே யிவையெல்லாம் வகைவகைக்கு
சரிபாகபலம்ஒன்றாய் நிறுத்துவைத்து
கோலமாயரைத்ததனை வழித்துக்கொண்டு
கொடுத்திடுவாய் நீறுநீரில் கலக்கியேதான்
காலிடமாம் செவிநாசி கண்களுக்கும்
நாயகமே மும்மூன்று-துளிதான்தாக்கே. ௩௰

(வ-ம்) கருஞ்சீரகம் நற்சீரகம் சுக்கு மிளகு ஏலம் வகைக்கு ஒருபலம்விதமாய் கொண்டுவந்துயிடித்து அறைத்து நீறுநீர்விட்டு கலக்கிபுகட்டவும்உடனே கண் செவி நாசி இதுகளில் மும்மூன்றுதுளிவிடவும் இந்தப்படி மூன்றுநாள் செய்யவுந்தீரும் இது பிரகாரம் இருவிலாவிலும் சாலைப்பற்றியும் சுடவும்.

வாய்கிரந்திநோயின்குணம்.




வாய்வீங்கும் வாயில்-நீர்வடியும் நிவர்த்தி.

(வ-ம்) கருணைக்கிழங்கு அல்லது காட்டுக்கருணைக்கிழங்கு ௫-பலம் கொண்டுவந்து அரைத்துமோரில் கலக்கி புகட்டவும் இந்தப்படி காலில்சுடவும்.

உதிரிநோயின்குணம்.

மயிரைச்சிலிர்த்துக்கொள்ளும்
அடிக்கடி கழியும் தண்ணீராயுங்கழியும் நிவர்த்தி.



(வ-ம்) விடத்தைக்கொழுந்து ௧௦-பலம் ஈருள்ளி ௧௦-பலம் இவைகளை அரைத்து எருமைமோரில் கலக்கிகொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும் இதுபோல இடதுவிலாவில்சுடவும்.

தவளைமுக்கடைப்பன்குணம்.

மூக்கடைத்து நெடுமூச்செறியும் தடுமாறும் நிவர்த்தி.




(வ-ம்) மிளகு திப்பிலி சித்திபிலே இதுகள்சமனாயெடுத்து அரைத்து நீறுநீர்விட்டு கலந்துநாசியில் பிழியவுந்தீரும் இந்தப்படி மூக்கில் சுடவும்.

இந்தப்படி தலைசுத்திச்சுடவும்.

அம்மணிச்சிலந்தியின் குணம்.

முன்னங்கால்முதல் தொப்புள்வரையும்வீக்கும் நிவர்த்தி.



தலைச்சுருளிவேர் ௩-பலம், வள்ளிவேர்பட்டை ௩-பலம் ஒன்றாயரைத்துவென்னீரிலேகலக்கிபுகட்டவும்தீரும் மேற்படி இரண்டுவேறும் அரைத்துவீக்கத்தில் தடவியரத்தீரும் இந்தப்படி நெஞ்சில்சுடவும்.

நாரைக்கால்நோயின்குணம்.

வயறுவீங்கும். வாயில்நீர்வடியும்

மயிர் சிலிர்க்கும் கால்வளையு ய்கூனிநிற்கும் நிமிராது நிவர்த்தி.

(வ-ம்) தரைப்பழுப்பு ஈருள்ளி சமமாயிடித்து அரைபடி சாறு பிழிந்துகட்டவும் மூன்றுநாள் செய்யத்தீரும். இந்தப்படி இடதுவிலாவிலே சூடுபோடவும். ஓம்ஸ்ரீ

வசனமாகச்சொல்லிய

மாட்டு வயித்தியம்.

மாட்டுக்குநோயுண்டாமலிருப்பதற்குசெய்ய வேண்டியசாந்தி.

செவ்வாய்க்கிழமையிலே, சிவனார்கிழங்குகொண்டுவந்துசொட்டாயிற் சுட்டுத்தறியண்டையல் பொங்கலிட்டு பொங்கினசாதமுங் கிழங்குங்கட்டுத்தறியிலும் வாசற்படியிலும் புதைத்துவைக்கவேண்டும் எப்படிப்பட்ட நோயும் வரவொட்டாமற்காக்கும்.

கோமாரிக்குச்சாந்தி.

திங்கட்கிழமையிற் கொடிவேலியிலையைப் பறித்துக்கொண்டுவந்து செவ்வாய்க்கிழமை உதயத்துக்கு முன்வாசலிற்பொங்கலிட்டுபகவானுக்குப்படைத்து வாசலிலுங்கொட்டாயிலும், புதைக்க சாந்தியாகும்.

புல்தின்னாமல் திகைத்துநிற்குமாகில் (வெக்கையென்று) பெயர்.

பக்குவம்—கற்பூரவள்ளியிலைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்துஉள்ளுக்குகொடுத்து விலாவில் சுட சொஸ்தமாகும்.

நாலுகாலும்வீங்குமாகில் (ஆனைவாதம்) என்றுபெயர்.

முதலாவது பக்குவம்-எந்த உபமான ரோகத்திலும் பட்டென்கிற ஊரிலிருக்குஞ் சதுரக்கள்ளியில் ஒரு கிளை வெட்டிக்கொண்டுவந்து நறுக்கி நறுக்காயரித்து ஒருமண் பாண்டத்திற்போட்டு பதக்கு தண்ணீர்வார்த்து

குருணிதண்ணீராகக்காச்சியிறக்கி வைத்து ஒருபெரியசட்டியினால்மூடி குப்பையாயிருக்குமிடந்தேடி பள்ளந்தோண்டி அப்பள்ளத்துக்குள்இரண்டு நாளைக்கு புதைத்துவைத்து மூன்றாம்நாளெடுத்து கையினால்தண்ணீரைத் துழாவி மூன்றுநாள் உள்ளுக்குகொடுக்க சொஸ்தமாகும்.

குறட்டைவிடுமாட்டுக்கு பக்குவம்.

மாட்டை பதினமாய்த் தரையிற்றள்ளி எருமுட்டைநெருப்புக்கும்பியில் எருக்கங்குழியொன்றை நுழையவைத்து எடுத்துச்சுடசுட இரண்டு மூக்கிலு முருவவிட்டுத் திருப்பி பின்பு சும்பாளும்இளுப்பைபுண்ணாக்குங் கலந்துகரைத்து சுடவைத்து விசேஷமாய் நாயற்றுக்கிழமையில் வார்க்கிறது இந்தப்படிக்கு இரண்டு இரண்டு அல்லது மூன்றுவாரம் வார்த்துவர குணமாகும் குறட்டையிருந்தவிடஞ் சொல்லாமலோடிப்போகும் கைகண்டமுறை.

மாடு பலயீனத்தால் மெத்த யிளைத்திருந்தாலும் அல்லது எவ்வளவு புஷ்டியாய் தீனிபிடித்துத் தின்னும் நாளுக்குநாள் பார்வையில்லாமலிருந்தாலும் புஷ்டியாகும்படியான தாசாமருந்து அல்லது. ரிவாவா.

மணக்கத்தையரிசிமாவு உளுந்துமாவு வகைக்குபடி-உ பனங்கருப்புட்டி க0 வெங்காயம் பலம் கஉ முந்திவெங்காயத்தைதோலுரித்துப்போட்டு பொடியாயரிந்து மேற்படிதினுசுகளில் கலந்து க0-தேங்காய் நெற்றின் பால் பிழிந்துபிசைந்து தேங்காய்ப்பிரமாணம் உருட்டிகொடுத்துவர புஷ்டியாகும்.

அல்லாமலு மற்றொருவிதம் - ஆதிவாரந்தோறும் ஆழ்ந்தநீரில் நீந்சலடித்து சாணத்தைக்கரைத்து சுமார் ஒருபடி பாலுஉள்ளுக்கு வார்க்கிறது இப்படி இரண்டு மூன்றுமுறைசெய்யவும் கைகண்டமுறை.

மாட்டுக்கு கண்ணிலே பூவிழுந்தால் செய்யவேண்டியபக்குவம், அரைப்படி பசுவின்பால் ஆழாக்கு உப்புபோட்டு நன்றாய்ச் சுண்டக்காச்சி மை போலவரைத்துப் பத்துநாளைக்கு கண்ணில்போட்டுவர கரைந்துபோகும்.

(மூலத்தின்குணம்) உட்காந்தாப்போல சாணமிடும் பக்குவம்பேய்துமுட்டிவிரையும் கிளிஞ்சிசதையு மரைத்துகழுநீரில் கரைத்துக்கொடுக்கவும்.

(சினைவெக்கையின்குணம்.) மூக்கிலேதண்ணீர்விழும், வெடிக்கும்உடம்புசுடும், மேயமாட்டாது பக்குவம் எள்ளு அரைநாழி படி-பசுவின்பாலிற் போட்டு ஊரவைத்து கறைத்துக்கொடுக்கவும்.

(மாட்டுக்கழுத்துப்புடிப்புகண்டால்) பக்குவம்எருக்கன்பாலுடன்நல்லெண்ணை அல்லதுவிளக்கெண்ணைசேர்த்துபிடரிமுதல்முதுகுவரையில்தடவி இருபக்கமுங்கழுத்தும் பிடரிங்க மற்றயிடங்களில் சூடுபோடவும் சொஸ்தமாகும்.

மாட்டுவயித்தியம்

முற்றிற்று.